392



உறக்கத்தை ஜெயங்கொண்ட ஊர்

... CONQUERED SLEEP

ஆதியே துணை

தரணியில் இல்லாத ஒருதனிச் செயற்பதி

மக்களுக்கு வயது தந்ததின் பிரயோசனத்தை
அறிந்து அடைகுவதற்கென்றாகிவிட்ட,
ஒரு சத்திய ஸ்தலம்

A UNIQUE AND PRACTICAL INSTITUTION FOR SELF-REALISATION, THE LIKE OF WHICH EXISTS NOWHERE ELSE IN THE WORLD

A SACRED SHRINE WHICH SECURES FOR MAN THE TRUE END AND AIM, FOR WHICH HE IS GIVEN HIS LEASE OF LIFE

விலை :
ரூபா-ஒன்று

Price :
Re. - One

OFFICE OF THE REGISTRAR OF ... MAY 1937

RN
N51
102323

ஆதியே துணை

மெய்ஞ்ஞான நடவு முறைக்
காப்புத் திருவிருத்தம்

வாக்குடைய மலங்கடத்தி மயங்கா னின்று
வல்லபையின் வசம்படிந்த வாசத் தாலே
நீக்கரிய மும்மலங்கள் பொடியும் சாயை
நின்றிலங்கும் பூரணத்தின் புதுமை யேறி
தேக்குமந்த ஞகதத்தைத் தோட்டு ஊணிச்
சேருமதி யமுதகலை பொங்கிச் சிந்தும்
வாக்குடைய வாக்கருளும் வாணி சத்தி
வளர்ஞானத் திருநடனம் வயங்கும் காப்பே.

செயல் பிரகாசச் சிந்து

௧. ஊழிவிதி நீதித்தீர்ப்பது-வந்துவிட்ட
உற்றகலி யுகக்கடைக் காலந்தன்னிலே

வசன விளக்கம்

ஆதி காலங் துவங்கி வேத கிரந்தங்களெல்லாம் கூறிவரும் ஊழிவிதி நீதித் தீர்ப்பின் கடைக்கால நிர்ணய அடையாளச் செயலானது நிறைவேறி வருகின்ற பிரகாரம், பூ மண்டலத்தும் ஆகாய வானமண்டலத்தும் அந்த நீதித் தீர்ப்பின் அடையாளம் தோன்றிவந்து விட்ட கடைக்காலமாகிய இந்த நாளையிலே,

EXPLANATORY NOTES

From the beginning of Time all sacred scriptures have been referring to the DAY OF JUDGMENT and the signs preceding it. Now many of the "signs of the times" have been appearing, as prophesied, in the celestial and terrestrial worlds.

உ. ஆழிக்கடல் சூழுலகிலே-கடைக்கால நாளில்ஆதி தேடிவந்த கூடகத்துறை

நீண்ட கரமாகிய அலைகளைச் சுருட்டி விசிறியடித்துக்கொண்டிருக்கும் மாருத ஓசையினையுடைய ஆழிய பெரிய கடலானது சூழப்பெற்ற பரந்த பூமியாகிய இந்த உலகத்தினிடத்தே, இறுதித் தீர்ப்பு நாளில் இன்னது நிகழ்ந்தாக வேண்டுமென்ற ஊழிவிதி நிர்ணயத்தின் படியே, அதை நடாத்த ஆதியின் சக்தி வல்லபமானது தேடிவந்துள்ள ஜீவநிலையாசனமாகிய பிரம்ம சொரூப வடிவு கூடகத் துறையினிடத்தே,

In this world, encircled by the vast ocean, the Primordial Divinity has, in accordance with the original plan, sought out this "Haven of true Brahmic Wisdom" in the southern region and graciously manifested Itself in Its divinely resplendent and august body.

ரு. விண்டுரைக்க வானங்களேகேள்-உன்னுடைய விளங்காத பங்கவுடல் தங்கவுடம்பாம்

மெய்ம்மை துலங்கிவிட்ட, அம்மெய்ம்மைத் துலக்கம் ஒலிவீசிறும் ஓசை கமழும் நீதிநெறி ஆலவாயினுக்குள் குடிபுகுந்திருக்கின்ற தெய்வீக இச்சைக்கு ஆசையுற்று, அம்மெய்ம்மை வாயினுள் நுழைந்து, அந்நீதியில் விளங்கும் எம்முடைய பரிசுத்த வாய்மைக் கிசைந்த எமது இனங்களாகி இருக்கின்றவர்களே கேளுங்கள் !

உன்னுடையது என்று நீ எடுத்துவந்த இந்த அனித்திய உடலானதற்கு அனித்தியம் வந்து பீடிக்கும் முன்னே, தேவப் பிரகாசம் ஒளிரும் நித்தியவுடல் என்னப்பெற்ற சூக்குமகாரண மகாகாரண உடலைத் தனதெனக் கைப்பற்றி நித்திய வாழ்வில் ஏறி நிலைப்பதற்கு ஆவன உனக்கு நெறியருள்புரிவோம்.

And addressing Its chosen fraternity, It says : "Oh ye, my people ! Inspired by a divine desire, you who have found your way and entered the Gates of this Blessed Haven of Truth, from which flows the perennial ambrosia of the reverberating harmony of sweet and divine music, lend me thine ears. You have come into this world with this transient mortal coil of yours. But before death overtakes you and puts an end to this uncertain body, we shall shower Our Blessings on you to secure for yourself a permanent spiritual body (sukshma, karana, maha karana), resplendent with divine lustre and shall help you to ascend the heights of eternal life."

ச. நீதியுடல் ஆதியெடுத்து-கடைக்காலம் நின்றிசைய எண்டிசைக்குந் தென்றிசையிங்கே

முதன் முதலாக ஆதியென்ற திருநாமத்தோடு எழுந்த பேரருட் பெரும்பதிப் பெருங்குணப் பெருந் துணைப்பெருஞ்சோதியானதுவே மனிதனுக்குக் கலியுகக் கடைக்கால மிதுவென உணர்த்தவேண்டுமென்ற ஒரு தனிக்கருணைப் பிரவாகத்தினலே ஜோதிப் பிரகாச வுடலில் உதயத் தோற்றமாகி, அருள்மாரி வருஷித்து, விவேக வேத விரத விதிப்பொருள் விரித்துக்கொண்டு, பூவுலகத்தில் நன்னெறிவீடடைய இச்சையுடையோருக்கு இதுநாள் வசந்தமென இசைந்து நிற்கின்ற, எண்டிசைக்கும் தென்திசையாகிய இங்கே,

Accordingly, the Primordial Divinity of infinite grace and infinite effulgence, overflowing with profound mercy to make known unto humanity that the time has come for the end of Kaliyuga, is showering a rain of grace, elaborating on the lore of the sacred scriptures and bestowing divine guidance on all aspirants after the right path, making them realise at the same time that this is the most opportune moment for spiritual advancement.

ரு. ஊழிவிதிக் கோடுவழிகண்–டந்தரத்தில்
ஊணிவிட்ட நீதிநகர் சாலையிதிலே

அவ்வாறு அருட்சோதித் திருவுருவினை அடக்கிக் கொண்டு உதயஞ்செய்துள்ள ஆதி சக்தியானதுவே, ஊழிநீதித் தீர்ப்பினை நடாத்தும் பொருட்டாக அத் தீர்ப்பின் நேர்வழிகண்டு அதனை, அந்தர்முகத் தவமாக நடவுமுறை அறம் துலங்குவதற்கென்று ஊணிவைத்துள்ள அறநெறி நீதிநகரமாகிய இந்தச் சாலையிலே,

And this Primordial Divinity which is Sakthi Itself, has, in order to carry out the final judgment, established the right and true path by prescribing certain internally mystical tapas, implanting the seed of righteousness which blossoms forth its virtues in Salai, the City of Justice.

சூ. மண்ணுலகில் எங்குமேயில்லா–நீதிநெறி
வண்ணஉன்ன தங்கள்பல வாழுஞ்சாலையில்

பரந்த பூமியில் எந்தத் திசையிலுமே காணப்படாத நீதி நெறிமுறையின் அழகொளிர் மெய்ம்மைத் தீர்க்கத் திட மேம்பாட்டுச் செயல்கள் அனந்தானந்தம் நின்று நிலவுகின்ற இந்தச் சாலையிலே,

The beauty and eminence of the innumerable highly spiritual, definite and sure methods adopted here are not to be found anywhere else in the whole world.

எ. அதிற்சில கொள்கையின்குறி—இந்தநாளில்
அவசிய மானதால றையுஞ்சாலையே

அவ்வாறு பிரகாசிக்கா நிற்கும் உன்னத மேம்பாட்டுச் செயல்கள் அனந்தானந்தங்களிலும் வெளிமுகத் தோற்றத்தில் குறிப்பிடும்படி பகிரங்கமாக விளங்கும் நீதிநெறி பக்தி சுத்தச் செயல்களில் சிலவற்றை, இப்போது தருவதற்கு உலகவினுமுகத்தான் அவசியம் ஏற்பட்டதனுல், அவற்றை வெளியேற்ற நின்றது இந் நீதி நகரம்.

By way of reply to queries raised by people, it is now felt necessary to make known to the world some of the very distinctive, unique and righteous deeds and practices prevailing here.

அ. உலகம்பல் கோடிநகரம்—ஊருசேரி
உகந்தெங்கும் புகைவகைக் குடிமலிந்து

க. பரந்துப டர்ந்தஇதுநாள்—உலகத்தில்
புகைவகை குடியாத பொற்சபைச்சாலை

ம. கள்ச்சாராயப் போதைவஸ்த்துக்கள்—எந்தநாளும்
கண்டறியா தெள்ளளவு மெங்கள்நகரம்

எங்கும் பெருமிதமாக இச்சையுடன் விரும்பி சிகரெட்டு, பீடி, சுருட்டு, உக்கா முதலிய புகை வகைகளை உபயோகிப்பதும், மற்றும் கள்ளுச் சாராயம் முதலிய

போதைவஸ்து வகையருக்களைக் குடிப்பதும் பழிப் பற்ற நாகரீக நடையென உகந்துகொண் டிருக்கின்ற இதுகால நாளையிலே, "இப்பெரிய உலக முழுதினும் இவ்வாறு புகைவகை குடிவகைகளை உபயோகிக்காத ஊர் ஒன்று இருக்குமா?"—என்று இதற்கென இடுப்புக் கட்டி மகா முயற்சியுடன் தேடிச் சுற்றிப் பார்க்கினும் எண்ணற்ற ஊர்கள் நிறைந்த இவ் வுலகத்தில் ஒரு தெருவுகூட இருக்கமுடியாதென்று கண்டாகிவிட்ட இது நேரத்திலே, இன்னும் இவ்வாறு தேடித்திரிவதை அறிந்த மாத்திரத்தில் இவ்வித ஆராய்தல் வீண்முயற்சி என, ஆராய்தலில் வல்லவரென்பார்கள் தீர்மானம் கூறிவிட்ட இதுதருணத்திலே,

மேலே கூறியுள்ள சுருட்டோ பீடி சிகரெட்டோ மற்றும் உண்டாகியிருக்கிற புகை வஸ்துக்களில் ஏதாவதொன்றோ இந் நகரத்தில் யாதொரு மனிதரேனும் அருந்துதல், ஒழுக்கத்திற்குக் கேடுசெய்வதும், மேலும் ஜீவஆவி வாடையை நிச்சயமாக மாற்றித் தகர்த்தே விடுகின்றதுமான ஓர் அந்தரங்க அசூசி வல்பிணியாக இருப்பதால், அதனை இந் நகரத்திலுள்ள எல்லோரும் புறக்கணித்துப் பழித்து விலகிப் பரிசுத்த நெறியில் எந்த நாளும் நடந்துவருவதுடனே, அதைப் போலவே கள்ளுச் சாராயங்கள், உயர்ந்த குடிவகையெனக்கூறும் போதைவஸ்துக்கள் அடங்கலையும் எவரொருவரும் உபயோகிக்காதபடிச்செய்து அவர்களைச் சுத்தப் பரிசுத்த பத்தியமேடேற்றிவைத்திருக்கும் தீங்கற்ற பொற்செயல் ஆலயத்தைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் நீதிநகரம் என்னப் பெற்றதே எங்கள் சாலையாகும்.

In these days when people are willingly and eagerly indulging in the evil habits of smoking cigars, cigarettes, beedies and hookah and drinking toddy, arrack and other intoxicating beverages and consider them not as disrespectable, but as a lovable, civilised way of life, and at a time when attempts to discover a place –at least a single street–which is free from these evils in the wide world consisting of countless cities and towns, villages and hamlets, have been found and declared to be vain and useless, it is considered in Salai that such habits are vices opposed to morals and that they are the secret and potential germs of infection that surely change and destroy the sweet aroma emanating from the soul in the human body and as such have been avoided as debasing; and a golden rule of conduct that no member therein should adhere to such evil practices has been laid down and followed by them; and they have thus been raised to a high level of purity, sanctity and austerity. Hence we can boldly declare that Salai, with the Temple of golden deeds in the centre, surrounded by fenced walls, is the one and only one of its kind on the face of the earth.

௰௧. இப்படியோர் சுத்தநகரம்—விரிவுலகில்
எங்கேங்கோடித் தேடினுமங் கெங்குங்கிடையா

இவ்வாறு முதன்மையாகப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்து துவங்கிச் சத்திய நீதிநெறி மெய்ஞ்ஞான வாழ்க்கைக்காகவேண்டி உயிர்ப்பிடி ஒருமன வைராக்கியங்கொண்டு நீண்டகாலப் பழக்கத்தில்வந்து உதயம் செய்துள்ள மகா சுத்தம் பொருந்திய பலன்தரு செயல் விளைவுற்றோங்கிய இந் நகரத்தைப்போல - உலக முழுதினும் எங்கெங்கும் எவ் வல்லாரும் எம் முயற்சிகொண்டும் ஓடிப்பரந்து தேடிப்பார்க்கினும் - அந்தத் தேட்டினுக்கு, இந்த உலக கோள முழுவதிலும் எங்கும் இதுநாள் ஒரு தெருவுகூடக் கிடைக்கப் பெறமாட்டாத அப்பேர்க்கொற்ற அதிசய விளைவுள்ள தெய்வப் பொருளென விளங்குவது மேற்கூறிய இதுநகரமேயாம்.

This holy city has been founded a long number of years ago for the purpose of training mankind to lead a life of truth, justice and wisdom. On the basis of strong will and firm determination, a state of the highest purity is attained by the effulgence of spiritual practices here. This centre of real spiritual culture, which has residents drawn from various castes and communities, now stands as a unique, miraculous and divine treasure. Though earnest and able persons may search for another similar place of practical spiritual enlightenment in both the hemispheres,

they cannot, it may be stated with the greatest certainty, meet with any success in their venture. For this is the only one of its kind in the whole world.

௰௨. அரசியல்வீ ணாடல்சினிமா-நாடகங்கள் அவைஎவை யும்விரும்பா ஐம்மணிப்பதி

எந்தக் காலத்திலும் வந்த வந்த எவ்வரசாட்சி ஆளுகையின் அரசியலிலும் தலையிடாத வைராக்கியத் துடனும், வீண் ஆடல் பாடல் சினிமா நாடகங்களிலும் வேடிக்கை வினோதக் களி விளையாட்டுக்களிலும் பிரயோசனமற்ற வீண் ஆடம்பரக் கூத்தாட்டங்களிலும் எக்காலத்தும் பொழுதுபோக்காத நெறியுடனும் நின்று ஐம்பொறிகட்கும் ஆதாரமானவைகளும் தன் ஆத்மாவுக் குரியவைகளுமான ஐந்து மகா மந்திரங்களின் மணி யொளிப் பிரகாசங் கண்ட அனந்தர்கள் நிலவும் அருட் பெரும் உதயசாலை இது.

The residents of this holy city never identify themselves with politics, nor do they desire to visit wasteful dramatic performances and cinemas, or take interest in other similar diversions. Such is Salai, the city of rising effulgence, resplendent with the lustre arising from the jewel of the five great sacred mantras.

௰௩. **இவ்வகையோர் நீதிநகரம்—இந்தநாளில்**
எங்கிருக்கும் மென்றறிஞர் தேடல்சரதம்

இந்த நாளில் மேலே கூறிய மேம்பாட்டினையுடைய தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு நீதிநகரம் எங்கு காணப் படும் என்று அறிஞராயுள்ளவர்கள் தேடிப்பார்த்தல் நியாயமே.

It may be stated that serious-minded and wise men have been in search of a place where the ideal or objective of man can be realised, where he can be really and fully freed from all defects and drawbacks, hindrances and handicaps, and weaknesses and vices of all kinds. It is only natural and reasonable to expect that wise men should launch forth on such a quest.

௰௪. **வீடுதோறும் வசதிக்கென்று—அசுத்தஇடம்**
விரிந்தவு லகிற்கோரே சுத்தஇடமாம்

உலகில் ஒவ்வொரு வீட்டிலும் தங்கள் வசதிக் கென்று மலஜலங் கழிக்கும் அசுத்த இடமொன்று வைத்திருக்கின்ற இதுநாளையில், சாலையொன்று மாத் திரமே, இந்த அகண்ட பூமியில் அவ்வாறாகிய அசுத்தங்க ளில்லாத சுத்தமான இடமாக இருக்கின்றது.

It is quite common in the world to have lavatories attached to each house for the sake of convenience. But the entire area of Salai is kept completely free from this kind of uncleanliness.

௰௫. அந்தமெய் நீதிநகரம்—எல்லையெங்கும்
ஆனபரி சுத்தமாயி ருக்கும்குடிகள்

ஜீவ சிம்மாசன மெய்ம்மைப்பதியில் குடியேற்றித் தேவ அருள்மாரி பொழிந்துகொண்டிருக்கும் நீதித் தெய்வம் கொலுவீற்றிருந்தருளும் மெய்ந்நெறி நன்னகரத்தின் எல்லைக்குள் குடியேறப்பெற்றவர்கள் எல்லோரும், மேற்கூறிய அசுத்தம் செய்யாது தெய்வ அச்சப்பாடுடையவர்களாய் அவ்வூரின் எல்லை முழுதும் பரிசுத்தமாக வைத்திருப்பதான நடைமுறையில் இருந்து வருகின்றார்கள்.

This is due to the fact that Salai is sacred ground and all its inhabitants are persons who have been initiated into the mysteries of the Jiva or Atman, raised to an exalted state, and enthroned on the seat of the Spirit. This is done by their Divine Lord who showers His grace on all the aspirants in a generous manner. The greatest awe and reverence they have for Divinity create an atmosphere of perfect cleanliness.

௰௬. வீடுதெரு வூருகள்தோறும்—அசுத்தமது
வேணுமென்றே செய்திருக்கும் உலகத்திலோர்

௰௭. சுத்தப்பதி தேடிப்பார்க்கிலோ—புவியிலோரே
முத்தர்கள்ப தித்தளங்கள் சித்திபுரமாம்

இவ்வளவு பெரிய உலகத்தினிடத்தே ஒரு நகரமோ அல்லது ஓர் ஊரோ அல்லது ஓர் ஊரில் ஒரு தெருவோ

பரிசுத்தமாயிருக்குமாவென்று பிரயாசைப்பட்டுத் தேடிப் பார்க்கில், அந்தத் தேட்டினுக்குக் கை மெய்யாகச் சுத்த மானது காட்டப்பெறவிருக்கும் வீடுகளும் தெருவுகளும் மற்றும் புதர் செடி கொடி நிறைந்த வெளியிடங்களும் பரந்து காணும் இடமாகிய, முள்வேலிமதிள் சூழப் பெற்ற மெய்ம்மைப் பிரகாச அறிவு துலங்கும் சித் சொரூப ஜீவகலைக்குள் பூரண வடிவங்கண்ட முத்தி நெறியவர்களால் செய்து உண்டாக்கியுள்ள மகா ஆன்ம சுத்த வரம்பினைக் கட்டுப்படுத்தித் திட்டம் சமைந்து அவ் வரம்பு கோட்டினில் வழுவாது நடை முறை விளங்கும் பலமதஸ்தர்க ளடங்கிய ஒரு முழு ஊராகிய எங்கள் பரிசுத்த சித்திபுரமே இது.

It is not possible to find in cities or towns or villages such all round cleanliness throughout an entire and comprehensive area; but here is the remarkable fact of a whole village, with several streets inhabited by residents drawn from diverse religions and different castes, kept always in a state of perfect cleanliness. Although the place is full of numerous bushes and trees, and open spaces, no unclean act is done anywhere within the limits of its thorn-fenced walls.

௰அ. உணவோரே பொழுததிலும்—சுத்தமுடன்
உண்டிசிறுத் தருந்துதல் பெண்டீர்பிள்ளையும்

மேலும் இங்கே, இரவு பகல் என்ற இருபொழு திலும், பகற்பொழுது ஒன்றே அதுவும் மதிய நேரத்தில்

102323

மட்டும் ஒரு பொழுது உண்டியை, ஆண் பெண் பிள்ளைகள் முதலிய எல்லோரும் எளிய உணவாக, உண்டி சிறுத்துக் குறைந்த அளவில் மகா சந்தோஷ திருப்தி குதூகலத்துடனே அருந்திக்கொண் டிருப்பதோடு,

As regards food, the inmates take only one meal in a day of 24 hours, and that too at midday. Even the one meal is limited in quantity and restricted in quality; and the people, both men and women, old and young, and also children, follow these diet restrictions with the greatest enthusiasm and joy.

QN
N51

௰௬. வஞ்சகம்பொய் சூதுசீட்டாடல்—எங்கள்திரு வள்ளல்பிரான் சாலையதி லெங்குமில்லையே

பேரின்பக் கடலிலிருந்து எடுக்கப்பெற்ற சுத்த முத்தி நித்தியப் பொருளை அளவில்லாமல் மாறுதுவாரி எங்களுக்கு அளந்துகொண் டிருக்கும் எங்கள் குரு பிரானவர்களுடைய சாலையில், வஞ்சகம் செய்தல் வயிற்றுப் பாட்டினுக்காகப் பிறரிடம் பொய் பேசி மோசம் செய்தல், பிறருக்கு வியாகூலம் கஷ்டம் உண்டாக்குதல், அல்லது பற்காட்டிக் கெஞ்சுதல் இன்னும் சீட்டாடுதல் சூதாடுதல் முதலிய சிறு செயல்களில் எவர் ஒருவரேனும் எக்காலத்தும் ஈடுபடுகிறதேயில்லை.

Evil habits and qualities such as cheating, uttering lies, deceiving others for the purpose of eking out one's livelihood, playing cards or

indulging in similar games of chance or gambling are all completely absent from Salai where our Divine Master is wielding His sceptre from the transcendental spiritual world and continuously showering profound and eternal truths from the ocean of wisdom.

**உ௰. குளிக்கின்ற முறைநிறுத்தி—பிர்மவித்தைக்
கூடியாடும் சுத்தப்பரி சுத்தஊரிது**

தேவ வாசனையுற்றுப் பாவ வாசனையற்று இன்புறு மாண்பு மனமாட்சிப் பரிசுத்த ஏற்றத்தினுல் நீராடல் என்னும் குளித்தல் அவசியம் தேவையில்லையென விலக்கப்பெற்றுப் பிரம்ம வித்தையின் எக்களிப்பினுல் ஆனந்தத்தில் தித்தித்துத் திளைத்துக்கொண்டிருக்கும், உலகச் சுத்தங்கள் எல்லாம் கண்டு நாணுறும், மகா பரிசுத்தமானது எங்கள் ஊராகிய இது ஒன்றேயாம்.

In this city of ours, where divine fragrance emanates as a result of the attainment of the highest ecstasy of Brahma Vidya and where the depressing odour of sin is dispelled, the inhabitants have discarded the habit of bathing, a means prescribed for bodily purity.

**உ௰க. உலகத்தில் லாதஇதுஓர்—ஊரென்று
உத்தமர் அறிவரல்லால் மத்திபர்காணுர்**

இவ்வாருன பரிசுத்த ஊரானது இந்நெடிய உலகத்தினுக்கெல்லாம் இது ஒரே ஊர்தான் என்று இங்கே

வந்து பார்த்த பொருமையற்ற எதார்த்த மனம் படைத்த அறிவுடையோர் அனைவரும் கூறுவர். இதனைச் சாமான்யச் செயலென அலட்சியமா யெண்ணும் லட்சியமேயற்ற அற்பர் அறியார் என்பதாம்.

The truth that this sacred city is the only one for the whole world will come home only to those visitors who are wise enough to be true, sincere and unbiased, but certainly not to the mean and ignorant.

உ௰உ. **நித்திரா தேவியவளின்–அதிகாரம் மத்திபமாய் மாற்றிவைத்திருக்குஞ்சாலையே**

மனிதகோலம் நிறைந்துள்ள உலகம் பூராவிலும், உலகறிவில் முதிர்ந்தவர்களென்றும் தேர்ச்சிபெற்றவர்களென்றும் உள்ள பண் இத வைத்திய டாக்டர்கள் எனும் வல்லாராலே கட்டாயமாக நிகழ்த்திவரும் செயல்கள் பலவற்றில் ஒன்ருன, மனிதசடலங்களுக்கு மகா சுகநல வலிமையுண்டாவதற்கு அதிக உறக்கம் உறங்கவேண்டுமென்று கட்டாயப்படுத்திக் கூறும் உறக்கமென்னும் தூக்கத்தினை, மேலும் பொதுவாகக் கூறுமிடத்து உலகத்திலுள்ள எந்த ஒரு வல்லமை சாலிகளாலும் முயற்சி வைராக்கியத்தைக்கொண்டு ஜெயிக்க முடியாத, இவனை யறியாமலே தட்டிச் சாய்த்துக் கிடத்திவிட்டு, ஜீவ ஆவியின் அறிவாகார மணமிருக்கும் இடத்தினுக்குத் துர்வாடைகளை உள்ளே யிழுத்து நிறப்பிக்கொண்டும், இவன் ஜீவனுக அடைந்துள்ள ஜீவ ஆவி

யாகிய மூச்சை மகா வேகமாக நாற்பத்தெட்டு அங்குல நீளம் வரையிலும் பிடுங்கி வெளியே விசிறிவிட்டு வயதைக் குறைத்துக்கொண்டும், இவ்வாறு ஜீவனைக் கொள்ளையடிக்கும் கோரத் தாண்டவமாகிய நித்திரை என்னப்பெற்ற சத்துருவாகிய இதனை, ‘ஒவ்வொரு மனிதருக்கும் நேர் விரோதியாகிய நிஜ சத்துரு இதுதான்’ என்று தெரிந்தாய்ந்தறிந்து அச் சத்துருவினைக் கொலை புரிந்தே விடுவதெனத் தீர்மானித்துள்ள அந்தக் கால வரம்பிலிருந்து, மேற்கூறிய அந் நித்திராதேவியினுடைய அமலாண்மை அதிகாரம் செல்லாவண்ணம் அதனை மத்திபமாகக் கோறல் படுத்தி மாற்றி, இதுகாலம் நடைமுறையில் இருந்து வருவது ஐயறன் உண்டாக்கி வைத்துள்ள அனந்தர்குல உறங்காநெறி விழிப்புலகச் சாலை.

As regards sleep, medical men who are considered to be well-versed and experienced in worldly knowledge believe that plenty of sleep is absolutely necessary for the upkeep of one's sound health. But, sleep is a veritable demon that cannot be ordinarily conquered even by strong persons. It pulls a man down without his knowledge and draws deep bad odours into the interior of his being, the seat of intelligence and Jiva wherefrom the sweet fragrance of the spirit emanates. It curtails the age of man by making him exhale 48 digits of breath, which is the germ of life or the jiva itself. Having realised this truth it was resolved to annihilate it at Salai

and accordingly the dominant power which sleep has over man has been considerably curbed and it has been brought under effective control. Thus the city of Anandars stands as the only wakeful and vigilant place in the whole world.

**௨௰௫. பகற்குமே லைந்துமடங்காய்-ஆரவாரம்
பாரிலெங்குங் கண்டறியாப் பெருவணக்கம்**

இன்னும், பகற் காலங்களிலேயுள்ள உஜார் உணர்ச்சி சுறுசுறுப்பு ஆரவாரம் முதலியவைகளைக் காணிலும் இராக்காலங்கள் பூராவும் ஐந்து மடங்கு அதன சொரூபமான உஜாரும் உணர்ச்சியும் சுறுசுறுப்பும் ஆரவாரங்களும் நிகழ்ந்து பெருவணக்கப் பிரம்மலயதவத்தேறி ஆனந்த பரவசத்தில் திளைத்து வந்துகொண்டிருப்பதான இது, இப் பெரிய உலகத்தினிடத்தே எந்த ஒரு எல்லையிலும் இதுநேரம் கண்டறிய முடியாத அறிவாகார சுவேத வராகக் கற்ப இடம் என்பதாம்.

Further, the alertness, enthusiasm, activity and bustle become intensified fivefold during the night. The high eminence of the devotional worship and the heights of ecstasy reached by the intensification of ardent meditation cannot be found at the present time in any other part of the world. And hence this is known as the enlightened place of "Sweta Varaha Kalpa."

உ௰௪. உறக்கம்ம ணுகாப்பெருவா-னேசைவீசும்
உள்ளகத்தி லேழெக்காளம் ஒலிப்பதின்னேர்

உ௰௫. விள்ளுமேழெக் காளம்வெளியில்-முழங்குமது
விண்டுகண்டெ டுத்துவைத்த மெய்வழிச்சாலை

விழி வெளியுலகிற்கு அப்பாற்பட்டதாகிய உறக்க உலகம் கடந்து, அப்பாலுக்கப்பாலாகிய உறக்கம் வந்து எட்டி அடிவைக்கமுடியாத ஜீவப்பிரகாசமதிமேவி, மேல் வான் உலகத்தினிடத்தே நின்று, அப் பரவெளியின் நாத ஒலி ஓசை எழுவகைப் பிரிவு நாதங்களாகத் தன் இதய லோகத்திலிருந்து எழுந்து ஒலிப்பதைக் கேட்கக் கேட்கப் பரவசத்திலாழச் செய்யும் கிரணநாத வீச்சைப்போலவே, இங்கே வெளியுலகத்திலும் ஏழு எக்காளங்களைச் செய்தமைத்து, வெளியுலகவாசிகள் அறியும்படியாக எடுத்து ஏந்தி இடையிடையே எக்காளத் தொனி முழக்கிக்கொண்டிருக்கும் மெய்வழிச்சாலை இது.

Beyond the conscious state, there is the sleep world and beyond that there is another region, the threshold of which can never be reached by sleep, and that region is that of the highest mental and spiritual illumination, where arises the unceasing seven-fold music, which the more and more one hears, the more and more one loses one's self in divine ecstasy. This truth has been symbolically represented here (at Meivazhi Salai) by the blowing of seven trumpets.

உ௰௬. தீர்க்கத்தெ ரிசியர்கள்–வந்திறங்கித்
திருவருள் வரிசிப்பின் அந்தரத்திலே

உ௰௭. அந்தரத்துந் துமிமுழங்கும்–திருநடன
அசைந்து அசைந்தநாதம் நிசந்தவழும்

உ௰௮. நித்தியநி சத்தவசந்தம்–அனந்தர்குல
நீள்தடமித் தெய்வப்பதி நிலத்தினிலே

உ௰௯. வந்துசெயற் சிறப்புடனே–இருக்குதின்று
வையகம்ம டுத்தறிய வரும்பதியே

இப் பெரிய பூமண்டலமானது உண்டாகி முதன் முதலாக மனுமுளை துவங்கிய கால வரம்பிலிருந்து, திட்டஞ் சமைந்திருந்த ஆதியூழி விதியின் தீர்மானத் தின்படியே நீதிநெறித் தவத்தினை மக்களுடைய இதய பூமியிலே விதைத்து, அவர்களைத் தேவர்களாக ஆக்கு வதற்கென்றே வந்து அருளுதயஞ் செய்துள்ள இது காலத்தில், அகமுகத்தோற்றரவில் விளங்கும் மகான்மிய அருங்காரணச் செயல் ஆன்ம பரவசத்தினலே உண்டா கின்ற அந்த அறச்செயலின் தேவதுந்துமி எழுந்து ஒலித்துக்கொண் டிருப்பதை, இங்கே வெளிமுகத் தோற்றத்திலும் அவ்வாறே அறச்செயல் வழியே தேவ துந்துமியின் முழக்கமானது வளம் பிறங்க நிரூபணை யில் முழங்காநிற்கின்ற உச்சிதமாகிய பேரார்வப் பெருஞ்செயலின் வழிபாடு வளர்ந்து படர்ந்துகொண் டிருக்கும் அனந்தர்குலஞ் சூழ்ந்த இத்தெய்வப் பதி யானது, அறிதற்கரிய அந்தர லோகத்திலிருந்து இறக்கப்

பெற்று, அதிசிறப்பு மேம்பாட்டின் சீர் சிறந்து, நீதிச் செயல் பூத்துப் புத்தெழிலோங்கி விளங்குகின்றதென்பதனை இதனடுத்துவரும் நேரமாகிய காலத்தில், இந்த உலக முழுவதும் நிச்சயமாக அறியப் போகிறதென்பது தீர்க்கத்திடமான திட்டமேயாம்.

When man was first created, it was decided to sow the seed of divine, mystic and devotional worship in his heart, to transform him into a celestial being and to help him reap the fruits of his devotion at this time. This grand process is now being manifested here in full. And the ecstasy and rapture produced thereby in the hearts of those who have been so transformed, have been symbolically represented by the reverberating melody of the *deva dundhumis* and the divine dance performed in tune with it.

Thus it will be seen that this place where virtuous and arduous deeds are practised by the self-realised, liberated and purified souls, called Anandars, has descended from the unseen world in all its fullness, perfection of intelligence and peak of beauty.

So, it may now be proclaimed that this world will surely and certainly realise soon that this is the only true, spiritual and sacred city for the age.

௩௰. ஆதிசுத்த முத்திச்செயல்கள்—அனந்தானந்தம்
சேதியிதில் முடியாது சுருக்கிச்சொன்னால்

௩௰௧. தன்னைத்தான் தெரிந்தபேர்களே—இதிற்குடியாம்
பின்னறிவர் சாலைநாட்டில் இல்லையில்லையே

மேலும், இந்தப் பழமைப் பெரும் பதியின் அதி மேம்பாட்டுப் பரிசுத்தங்களும், அதி நீதியின் எதார்த்த வடிவங்களும், அதி தவோன்னதப் பக்தி விரதங்களும், அதி விவேக ஆட்சி மதிபுரி நெறிகளும், அதிசாந்த ஒழுக்க துல்லப வல்ல வரம்பு கோட்டின் நடைமுறைகளும் இந்த ஏட்டில் எழுத முடியாதவண்ணம் மகாப் பெருக்கமாக இருக்கின்றபடியினாலே அவையனைத்தையும் சுருக்கிச் சொல்லவேண்டுமென்றால், இந்த நெறி நீதி நிறைத்து நிறைந்திருக்கும் நீதிநகரமாகிய மெய் வழிச் சாலைவளநாட்டில், பல்வேறு நகரங்களிலும் சாதிகளிலுமிருந்துவந்து இங்கே குடியேறித் திரண்டிருக்கின்ற பேர்களில், எல்லோரும் தன்னைத்தெரிந்து இதயப் பிரகாச ஏற்றத்தில் விளங்க நிற்கின்றார்களே தவிர, ஏனைய தன்னைத் தெரியாதவர்கள் ஒருவர்கூட இங்கே குடியில்லை என்பதாம்.

Further, the purities resulting from a life of the highest thinking, the manifestation of truth arising from great justice, high devotion and rectitude springing from tapas of the highest kind, methods and practices awakened and adopted by the highest intelligence, rules and

regulations defined and demarcated by the principles of peace and right living, it is not possible to explain all these in detail in this publication. Suffice it to say that in this city of justice called "Meivazhi Salai" are found people drawn from different castes and communities who have settled down here permanently. They are all persons who have taken re-birth in their spiritual body and developed themselves in the spiritual path. None, not even one, whose heart has not been illuminated lives here.

௩௰௨. வீண்முயற்சி என்றதாய்வலார்–சொற்றமொழி மிகப்பொருத்த மேஇன்னாள் எப்படியெனில்

மேலே கூறிய சகல சிறப்புக்களையுமுடைய இந்த நீதி நகரத்தை உலகத்தில் தேடுவது வீண் முயற்சி என்று ஆராய்ச்சித் திறமையர்கள் சொன்னசொல் இன்று மிகப் பொருத்தமே. அஃதெப்படியெனில்,

Persons who generally express an opinion after a good deal of thinking, say that the search for a place of high principles, great deeds and no weaknesses or vices, is a futile one. What they say appears to be true. And this is so, for this reason :

௯௰௯. பெரியக டலிலோருசி-புதைந்திருத்தல்
போலேயு லகத்துக்கே ஒன்றேயிடமாய்

௯௰௪. இருப்பதா லாய்வலர்கள்-வீண்முயற்சி
என்றதுச ரிமுயற்சிக் கெட்டாதஇடம்

௯௰௫. உலகமு யற்சிக்கெட்டாத-உன்னதஇடம்
ஒன்றிதேவு லகத்திலென் றுற்றகாப்பிதே.

மகா ஆழத்தையுடைய பெரிய கடலினிடத்தே ஒரு சிறிய ஊசியானது ஆடம்பரமின்றிப் படிந்துகிடப்பது போலவே, இவ்வளவு பிரம்மாண்டமாகிய அகண்ட வரம்பு காணமுடியாத நெடிய உலகத்தினிடத்தே பல தேசங்களும், ஒன்றுக்கொன்று எட்டமுடியாத பலபல பாஷைகளும், அளக்கமுடியாத நாடு நகரங்களும் நிறைந்து பெருகி விரிந்துள்ள இந்தப் பூமியினிடத்தில், கோடிக்கு ஒன்று என்றுகூடச் சொல்லமுடியாத அவ்வளவு சுருக்கமான ஒரு எல்லையாக இது இருப்பதானது, உலக விசாரணைப் போதிப்பு ஆய்வல்லார்களின் உலகப் பாட் டாய்தலுக்கு எட்டப்படாத உச்சச் செயல்ஸ்தானத்தில் இருப்பதால், அவர்கள் வீண் முயற்சி என்று சொன்னதுவே சரியாம். அவ்வாறு உலக ஆராய்ச்சி வல்லார்களினுடைய முயற்சிக்கு எட்டாத உன்னத இடம், இவ்விரி வுலகத்துக்கு ஒன்றாகிய இதுவேதான் என்று உலக எதார்த்தத்தில் உறைந்து வருகின்றது கார்மானமாம்.

Just as a small needle is embedded in the vast and deep ocean, even so is this small city of truth in the wide expanse of the world. Hence it is very difficult for people to visualise the existence of such a place. So they are right, within the limits of their knowledge in describing the search for it as a " vain effort. " But such a divine place does, in fact, exist at the present time, though it may be beyond the reach of the merely worldly-wise people.

தேடுதல்

இங்கே குறிப்பிடப்பெற்ற செய்தி "குளோப்" என்ற உலகச் செய்தி ஸ்தாபனத்தால் 21-12-1950ல் வெளியிடப்பெற்றது.

"சிட்னி (ஆஸ்திரேலியா), டிசம்பர் 21:-பிரெடெரிக் கார்ன்ஸ் என்பவர் தம்முடைய மனைவியுடனும், நான்கு குழந்தைகளுடனும் மூன்று ஆண்டுகளுக்கு முன் மாஞ்செஸ்டர் (இங்கிலாந்து) நகரத்திலிருந்து புறப்பட்டு 90,000 மைல்கள் பிரயாணம் செய்திருக்கிறார்.

சிகரெட் முதலிய புகை வகைகளை உபயோகிக்காமலும், சாராயம் முதலிய குடி வகைகளை அருந்தாமலும், சூதாடாமலும், பொய்ச் சத்தியம் செய்யாமலும் இருக்கிற மேம்பாடான உன்னத கொள்கைகளையுடையவர்கள் குடியிருக்கும் முழு நகரம் ஒன்று உலகத்தில் இருக்கிறதா என்று தேடிப்பார்க்கவே மிஸ்டர் கார்ன்ஸ் உலகத்தில் பிரயாணஞ் செய்துவந்தார்.

இதுவரையில் கியூபா, பிரிட்டிஷ் மேற்கிந்தியத் தீவுகள், தென் அமெரிக்கா, வட அமெரிக்காவிலுள்ள 48 ஸ்டேட்டுகள், ஆஸ்திரேலியாவிலுள்ள ஆறு நாடுகள் முதலிய நகரங்களில் அவர்கள் பிரயாணம் செய்து பார்த்திருக்கிறார்கள். இப்போது கார்ன்ஸ் தன் குடும்பத்துடன் மறுபடியும் சுற்றுப் பிரயாணத்தைத் தொடர்ந்திருக்கிறார். அவர் ஆஸ்திரேலியாவை விட்டுப் புறப்பட்டு அமெரிக்காவிலேயே மேற்சொன்ன உன்னத நன்னெறி நகரத்தை இன்னும் தேடிப் பார்க்கப் போய்க்கொண்டிருக்கிறார். அவர் இப்போது கலிபோர்னியா (தென் அமெரிக்கா) விலுள்ள லாஸ் ஆன்ஜலீஸ் என்ற நகரத்திற்குப் போகிறார்."

உலகத்தில் இருக்கிறதா என்று தேடும் மேலே குறிப்பிடப்பெற்ற இடம், தென்னிந் தியாவிலே திருச்சிராப்பள்ளி ஜில்லாவின் புதுக்கோட்டைப்பகுதியில் 'மெய்வழிச்சாலே' யென்ற பெயருடன் பிரத்தியக்ஷமாக விளங்கு கிறது. அத்தகைய இம் மெய்ந் நீதிப் பொன் நகரத்தின் செயல் விவரங்களை உலகுக்கு அறிவிக்கும் பொருட்டாகவே மெய்வழிச் சபையார் விடுத்த எதார்த்த வெளியீடு இந் நூல்.

A QUEST

The following message was published by the "Globe" world news agency on 21st December, 1950 :—

"Sydney, Dec. 21 :—Frederick Cornes, his wife and four children have travelled 90,000 miles since they left Manchester nearly three years ago.

They have travelled the world in search of 'Utopia'-a place, according to Mr. Cornes, where the inhabitants are people of high principles, and who neither smoke, drink, gamble or swear.

Areas inspected so far are Cuba, British West Indies, South America, each of the 48 United States and the six Australian States.

Now the Cornes are on their travels again. They have just left Australia and are going back to America to make a further inspection. Their immediate destination is Los Angeles, California".

The so-called " Utopia " is a reality in South India, and this publication of the Meivazhi Sabha gives details of the place. This golden city, Meivazhi Salai, is situated in Pudukkottai division in Tiruchirapalli district.

•

ஆதியே துணை

தவநெறி மாலை
(DEVOTIONAL PSALMS)

வானத்தி ருமுதலோர்
வந்திருக்கும் கானகத்தே
தோணப்பி றந்துவளர்
தேவகன்னி தேவரெல்லாம் ௧

ஊழிப்பெரு நாள்தாண்ட
யுகத்தவசு செய்யவென்று
நாளாகி விட்டதென
நாதசுத்தி பக்தியுடன் ௨

பச்சைம ரத்தடியே
புதுப்பானைப் பொங்கலிட்டு
உச்சிதமாய்த் தேவபிரான்
உச்சிஷ்ட மென்றெடுத்து ௩

உப்பிலா தஅமுது
உண்டொ ருபொழுதாய்
இப்படியு வவாசம்
இருந்துத வசுபண்ணி ௪

மூவ்வாசை யும்வெறுத்து
முன்னோரைப் போற்றிசெய்து
நாவுரு சியடக்கி
நல்லதவத் தேறிநின்று ௫

வாடியு டல்வதங்கி
    வளருந்த வங்காட்டில்
கூடித்த வம்புரிந்தார்
    குடல்காய்ந்து மேகருக ௬

வதங்கிமு கம்சோர்ந்து
    மன்னுவின் முன்னிலையில்
இதமாயு கத்தவம்செய்
    திருந்தார்கள் கானகத்தில் ௭

பார்க்குள்ளி ருந்தபொய்ப்பேர்
    பரிசும்சி றப்பும்விட்டு
தீர்க்கத்தெ ரிசனத்தின்
    செல்வயு கத்தவசு ௮

செகம்புரக்க வேபிறந்த
    தேவபிரான் சொற்படியே
அகிலத்தி ருவலத்தின்
    அரங்கஞ்சுற்றி வந்தார்கள் ௯

பெரியவ ரம்வாங்கப்
    பிடித்தார்க ளேதவசு
வரும்வருங் காலமெல்லாம்
    வாடாத வாழ்வினுக்கு ௰

யுகங்கால வித்தெல்லாம்
    யுகத்தவசி லேசார்ந்து
செகங்கோடி காலவித்தாய்
    சேர்ந்தார்க ளம்மானே ௰௧

10233
QN
N51

இகமீ துகயுகமாய்
எமனணுகா வித்தெடுக்க
அகம்ஆதி மூலம்வந்து
செகத்திலுற்ற திங்கேயம்ம ௰௨

சென்றயுகங் கள்மேலும்
திரும்பிவ ரவழைத்து
என்றுமிருந் தூவாழ
எம்பிரான் கட்டளையே. ௰௩

கி. பி. – **1951** ... ...முதல் மாதமும்,
கலியுகம் – **5052**... ...பத்தாம் மாதமும்,
ஹிஜ்ரி – **1370** ... ...நான்காம் மாதமும்

ஆகிவிட்டதே.

Christian Era – 1951 ... First Month,
Kaliyuga – 5052 ... ... Tenth Month,
Hijri – 1370 ... ... Fourth Month

has already elapsed.

மெய்வழிச்சபையார் வெளியீடு

திருச்சினப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிட்., திருச்சிராப்பள்ளி